1

‘நடைமுறையில் இருந்துவந்த சோஷலிசத்தின்’ முடிவு

1989 ஆம்ஆண்டில் நிகழ்ந்த பெர்லின் சுவரின் தகர்ப்பானது ஐரோப்பிய அரசியல் வரைபடத்தில் ஒரு ஆழமான மாற்றத்தை ஏற்படுத்தியது. சோவியத் முகாமைச் சேர்ந்த அடக்குமுறையார்ந்த அதிகார வர்க்க ஆட்சிகள் உள்ளாக நொறுங்கிச் சரிந்ததில் நல்ல விளைவொன்று ஏற்பட்டது. “நடைமுறையில் இருந்த சோசலிசத்திலிருந்து கம்யூனிசம் விடுவிக்கப்பட்டதுடன், தொழிலாளர்வர்க்க விடுதலையை நோக்கிய போராட்டத்துக்கான தத்துவமாக அது மீண்டும் விரிவடைந்தது. எனினும் (இந்த அதிகாரவர்க்க ஆட்சிகள் நிலைகொண்டிருந்த நாடுகளின்) அரசியல் கட்டமைப்புகளில் ஏற்பட்ட பேரெழுச்சிகளும் முக்கியமான பொருளாதார மாற்றங்களும் சேர்ந்து முதலாளித்துவ அமைப்புமுறைக்கு மீண்டும் திரும்பக்கூடிய தொடர் நிகழ்முறையைத் தோற்றுவித்தன. இது உலகம் தழுவிய கடும் சமூகரீதியான பின்விளைவுகளை ஏற்படுத்தியது. ஐரோப்பாவில் முதலாளித்துவத்துக்கு எதிரான சக்திகளின் செல்வாக்கு தவிர்க்க முடியாதபடிக்கு கசக்கிப் பிழியப்பட்டு சாரமிழந்து போனது. சமூகப் போராட்டங்களை ஒழுங்கமைவு செய்வதும் அவற்றை முன்னெடுத்துச் செல்வதும் மேலும் மேலும் கடினமானதாயிற்று.1968 க்குப்பிறகு பல தேசிய பண்பாடுகளின் முக்கியத் தளங்களில் தீர்மானம் செய்யும் நிலையில் இருந்த இடதுசாரிகள் ஒட்டுமொத்தமாக கருத்துநிலையளவில் தமது செல்வாக்கை இழந்தனர்.

* ‘முற்போக்கு இடதுசாரிகள்’: ஆங்கிலத்தில் ‘ராடிகல் லெஃப்ட்’ (Radical Left) என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. ஐரோப்பாவில் ‘இடதுசாரிகள்’ எனும் பதம் டோனி பிளேயர் போன்றோர் தலைமையிலான லேபர் கட்சி, ஜெர்மனியின் ‘சமூக ஜனநாயகக் கட்சி’ ஃபிரான்சின் சோசலிஸ்ட் கட்சி போன்ற கட்சிகளைக் குறிப்பதாக உள்ளது. ரேடிகல் லெப்ட் என்பது கம்யூனிஸ்ட் அமைப்புகளையும், டிராட்ஸ்கிய அமைப்புகளையும் குறிப்பதாக உள்ளது. தீவிர இடதுசாரிகள் எனப் பொருள்படும் ‘எக்ஸ்ட்ரீம் லெஃப்ட்’ (Extreme Left) என்ற பதம் மாவோயிஸ்ட்டுகள் உள்ளிட்ட பல குறுங்குழுக்களைக் குறிக்கப்பயன்படுத்தப்படுகின்றது. மொ-பெ.

தேர்தல் களத்திலும் இத்தகைய பின்னடைவு வெளிப்படையாகத் தெரிந்தது. 1980களிலிருந்து யூரோ கம்யூனிசம்[1] என்பதன் அடிப்படையில் ஒன்றுபட்டிருந்த கட்சிகளும் மாஸ்கோவுடன்[2] அன்றைக்கும் பலமான பிணைப்புகளைக் கொண்டிருந்த கட்சிகளும் தாங்கள் மக்கள் மத்தியில் கொண்டிருந்த ஆதரவில் ஒரு பின்னடைவை எதிர்கொண்டனர். சோவியத் ஒன்றியத்தின் தகர்விற்குப் பிறகு இது கடும் வீழ்ச்சியாக மாறியது. 'புதிய இடதுசாரி'க் குழுக்களுக்கும் டிராட்ஸ்கியக் கட்சிகளுக்கும்[3] இதே நிலை ஏற்பட்டது.

இந்த சூழ்நிலையில்தான் ஒரு மறு கட்டுமான கட்டம் துவங்கியது. இன்னமும் எஞ்சியிருந்த முதலாளித்துவ எதிர்ப்பு சக்திகள் மீண்டும் இணைந்ததன் மூலம் பல இடங்களில் புதிய அரசியல் அமைப்புகள் உருவெடுக்கத் தொடங்கின.முந்தைய பத்தாண்டுகளினூடாக வளர்ச்சியடைந்திருந்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கங்கள், பெண்ணிய இயக்கங்கள், சமாதான இயக்கங்கள் ஆகியவற்றோடு பாரம்பரிய இடதுசாரி சக்திகள் புதிய இணைப்புகளை உருவாக்கிக் கொள்வதற்கு இத்ததைய போக்கு உதவியது. 1986ல் ஸ்பெயின் நாட்டில் உருவாக்கப்பட்ட இஸ்க்வீரிடா யுனிடா இந்த விஷயத்தில் முன்னோடியாக இருந்தது. இதேபோன்ற முன்முயற்சிகள் போர்ச்சுக்கல்லிலும் வடிவெடுத்தன அங்கே யூனிட்டரி டெமாக்ரடிக் கூட்டணி (CRU-CDU) 1987ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. டென்மார்க்கில் 1989ஆம் ஆண்டு யூனிடிலிஸ்ட்ஸ்/ரெட்கிரீன்ஸ் என்ற அமைப்பும், பின்லாந்தில் 1990இல் இடதுசாரி கூட்டணியும், 1991இல் இத்தாலியில் கம்யூனிஸ்ட்ரீ பவுண்டேஷன் கட்சியும் (பிஆர்சி), அதே ஆண்டு கிரீஸ் நாட்டில் சினாஸ் பிஸ் மாஸ் (இடதுசாரி இயக்கங்கள், சுற்றுச்சூழல் அமைப்புகளின் கூட்டணி) என்ற அமைப்பும் உருவாயின. இவற்றின் அமைப்பு வடிவங்கள் வேறுபட்டவையாக இருந்தன. இஸ்க் விரிடா யுனிடாவில் இருந்த ஸ்பெயின் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட கட்சிகள் தங்களுடைய இருப்பினை தொடர்ந்து பராமரித்து வந்தன; போர்ச்சுக்கல்லில் இயங்கிவந்த யூனிடரி டெமாக்ரடிக் கூட்டணி ஒரு தேர்தல் கூட்டணியாகத்தான் செயல்பட்டது. கம்யூனிஸ்ட் ரீ பவுண்டேஷன் கட்சியும் சினாஸ் பிஸ்மோசும் தமக்கான ஒன்றிணைந்த புதிய அரசியல் தன்னிலையை வடிவமைத்துக் கொண்டன.

(இத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும்) பெர்லின் சுவரின் தகர்ப்பிற்கு முன்னர் இருந்த கட்சிகளைப் புதுப்பிக்கும் முயற்சிகள் (மேல்பூச்சான மாற்றங்களை முன்னெடுத்த முயற்சிகள்) சில நாடுகளில் மேற்கொள்ளப்பட்டன. 1989ல் செக் குடியரசு

அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து பொகிமியா, மொரேவிய பகுதிகளுக்கான கம்யூனிஸ்ட் கட்சி (KSCM) அமைக்கப்பட்டதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. 1990ஆம் ஆண்டில் ஜெர்மனியில் டெமாக்ரடிக் சோஷலிசம் (பிடிஎஸ்) கட்சி தோன்றியது. இது 1949 முதல் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் ஆட்சிநடத்திய சோஷலிஸ்ட யூனிட்டி கட்சியைத் தனது வசமாக்கிக் கொண்டது. 1990ல் ஸ்வீடன் நாட்டில் இடதுசாரிக் கட்சி கம்யூனிஸ்ட்டுகள் மேலும் மிதமான நிலைபாடுகளை எடுக்கத் தொடங்கியதுடன் 'கம்யூனிஸ்ட்' என்ற பெயரையே கைவிட்டு விட்டனர்.